# இலக்கில்லாத தமிழர்களின் அரசியல் போக்கு

## இலட்சியம் நிலையில்லாததினால் இழந்த இழக்கப்படும் அழுத்த அணுகுமுறைகள்

இலட்சியம் மாற்றப்படலாகாது. அதில் பற்றுறுதி வைத்து அதற்காக போராட்டம் முன்னெடுக்கப்பட வேண்டும். தெலுங்கானாவுக்காக ஆந்திர மக்களின் போராட்டமாக இருக்க வேண்டும். சந்திரசேகர ராவ் தனது தெலுங்கானா இலட்சியத்தை எந்த சமரசத்திற்கும் கூட்டியோ குறைத்தோ மாற்றவுமில்லை விட்டுக்கொடுக்கவுமில்லை. அதுதான் இலட்சியத்தின் இருப்பு. இலட்சியத்தில் அவநம்பிக்கை ஏற்படலாகாது. சந்தர்ப்பத்திற்கு ஏற்றாற்போல் இலட்சியத்தை மாற்றம் செய்வதால் அதன் மீதுள்ள நம்பிக்கை இழக்கப்படும்.

**அரசின்மீது அழுத்தங்கள்**

ஒரு கட்சியோ தாபனமோ தனது இலட்சியத்தில் தடுமாற்றம் அடைந்தால் தேவைக்கேற்றபடி மாற்றம் செய்தால் அந்தக் கட்சியின் எதிர்காலம் குறிக்கோள் அற்றதாக ஒரு தீர்மானம் எடுக்க திறனில்லாத மேற்கொள்ளும் சகல நடவடிக்கைகளும் அர்த்தமற்றதாகவே அமைந்துவிடும்.

அரசாங்கத்தின் மீது பிரயோகிக்கப்படும் அழுத்தங்களினால் மட்டுமே தமிழ் மக்களின் அபிலாசைகளுக்கும் பிரச்சினைகளுக்கும் எதிர்பார்ப்புக்களுக்கும் ஒரு முடிவு கிட்டும் என்ற அசையாத நம்பிக்கையிலேயே காலம் ஓடியது ஓடிக்கொண்டிருக்கிறது. அழுத்தங்கள் பல யுத்திகளில் பல சக்திகளினால் பல சாத்தியப்படக்கூடிய சந்தர்ப்பங்களில் காலத்துக்காலம் கையாளப்பட்டு வந்திருந்தன. மக்கள் பிரதிநிதிகளினால் சட்டசபையில் பிரயோகிக்கப்படும் அழுத்தங்கள் எதுவித பிரயோசனமுமற்றவை என்பது தெளிவான வெளிப்பாடு. அதனாலேயே மக்கள் சக்தியாக சத்தியாகிரகம் பகிஸ்கரிப்பு ஆயுதப்போர் என்றும் தற்போது கவனயீர்ப்பு போராட்டங்கள் எழுச்சி பெற்று தீயைபோன்று பரவிக் கொண்டுள்ளது. ஆனாலும் பாதிக்கப்பட்ட அல்லது சம்பந்தப்பட்ட தரப்பினர் மட்டுமே முழுமையாக பங்கேற்று தற்போது கவனயீர்ப்பு போராட்டங்கள் நடைபெறுகின்றன.

தமிழரசுக்கட்சி ஆரம்பித்தது ‘சமஷ்டி’ என்ற அதிகாரப் பகிர்வு கொண்ட ஒரு இணைப்பாட்சியில் தமிழ் பேசும் மக்கள் தம்மைத் தாமே ஆளும் சுயாட்சியை ஏற்படுத்தவதற்காக என்பது இலட்சியமாக கொள்ளப்பட்டது. அதற்காக அதை வலியுறுத்தி பாராளுமன்றத்திற்குள்ளும் வெளியிலும் போராட வேண்டிய தேவை இருந்தது.

ஆரம்ப காலத்தில் மக்கள் பிரதிநிதிகள் வழிநடத்த கிராமங்களிலிருந்தும் ஒவ்வொரு வீட்டிலிருந்தும் மக்கள் கிளர்ந்தெழுந்து போராட்டங்களில் பங்குபற்றி வந்துள்ளார்கள். உதாரணமாக 1956 – 1972 வரை இடம்பெற்ற அகிம்சை போராட்டங்கள் மிகவும் ஆக்கிரோஷமாக துடிப்புள்ளதாக வெற்றிகரமாக அமைந்திருந்தன. யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்ட கச்சேரி நிர்வாகத்தை முடக்கி கச்சேரி வாசலை மறித்து சத்தியாகிரகம் செய்தமை பின்னர் வவுனியா மன்னார் திருகோணமலை மட்டக்களப்பு என அன்றிருந்த மாவட்டங்களின் கச்சேரிகள் அணைத்திற்கும் பரவியது. பல நாட்கள் அல்ல சில மாதங்கள் தொடர்ந்தும் கச்சேரி நிர்வாகம் ஸ்தம்பிதமடைந்தது. அவ்வாறான கட்சி அமைப்பு செயற்பாடுகள் தலைமைகள் தொண்டர்கள் இலட்சியப் பற்றுதல் ஆகியவற்றை இப்போது காணமுடிவதில்லை.

அந்தப் போராட்டங்களினால் அழுத்தத்தை அரசுக்கு கொடுக்கமுடியாமற் போனதற்கு பல காரணங்கள் இருந்தன. அப்போராட்டங்களை சிங்கள ஆங்கிலப் பத்திரிக்கைகள் பெரிதாக கண்டுகொள்வதில்லை. சிறு செய்தியாக ஒரு முலையில் போட்டுவைப்பார்கள். வீரகேசரி தினகரன் இரண்டும் மட்டும்தான் தமிழ்த் தேசியப்பத்திரிக்கைகள். அதிலும் தினகரன் அரசாங்க சார்பானது. ஈழநாடு பிராந்திய பத்திரிக்கை. சுதந்திரன் தமிழரசுக் கட்சியின் பிரச்சார வாரப்பத்திரிக்கை. அதில் மட்டுமே விபரமான சத்தியாக்கிரக செய்திகள் இடம்பெறும் இலங்கையின் வடகிழக்கில் என்ன நடக்கிறது என தென் இந்தியாவுக்கே தெரிந்து கொள்ள முடியாத நிலைமை. செய்திப் பரிவர்த்தனை விரிவடையப்படாத காலம். தனியார் வானொலி தொலைக்காட்சி செல்லிட தொலைபேசி எதுவுமே இல்லாத காலம். அரச வானொலி செய்தியாககூட போராட்டங்கள் பற்றி வெளியிடாது. வீட்டுத் தொலைபேசி கூட சில பணவசதி படைத்தவர்களிடம் மட்டுமே இருந்த கால கட்டம். இது இலங்கை நாட்டின் உள்ளூர் நிலைமை.

உலக அரசியலை கூறுவதானால் ஐக்கிய நாடுகள் சபை 1948ல் ஆரம்பிக்கப்பட்டு வல்லரசு நாடுகளின் போட்டிக்குள் சிக்கித் தவித்துக் கொண்டிருந்த காலகட்டம். உள்நாட்டு அரசியல் பிரச்சினைகளில் ஐ.நா.சபை தலையிடாதிருந்த காலம். மனித உரிமை பற்றி சிந்திக்கவோ பேசுவதற்கோ முன்வரக்கூடிய ஆட்களோ அமைப்புக்களோ உருவாகாத உலகம். இலங்கையின் ஆட்சி அதிகாரம் ஆர்ப்பாட்டங்களை அடக்கிவிட்டது. 1972ம் ஆண்டைய அரசியல் அமைப்பு உருவாக்கப்பட்ட சூழல் அரசின் தமிழருக்கு எதுவும் கிடையாது என்ற

அழுங்குப்பிடியினை அச்சொட்டாக வெளிக்காட்டியது. 'இனி கடவுள்தான் தமிழினத்தைக் காப்பாற்ற வேண்டும்' என தமிழரசுத் தந்தையும் சமஷ்டி எண்ணக்கருவின் மூலக்கர்த்தாவுமான எஸ்.ஜே.வி. செல்வநாயகம் சலித்துக்கொண்டார்.

தடுமாறிய தமிழரசுக்கட்சி அடுத்த முக்கிய கட்சியான தமிழ் காங்கிரஸ் கட்சியுடன் கூட்டுச் சேர்ந்து தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி என புதிய பெயரை சூட்டிக்கொண்டு சமஷ்டி என்ற இலட்சியத்தையும் கைவிட்டு 'தமிழ் ஈழம்' என 1974லில் வட்டுக்கோட்டை தீர்மானமாக ஏற்றுக்கொண்டது. இங்குதான் பிரச்சினையின் ஆரம்பம். இந்த இலட்சிய மாற்றத்தால் பின்னர் காலங்களில் சமஷ்டி அடையாளம் கொண்ட சந்திரிக்காவின் (சுதந்திரக் கட்சி) கலாநிதி. நீலன் திருசெல்வத்தின் சட்ட நுணுக்கத்தினுடன் வரைந்த தீர்வுத்திட்டத்தையும் ரணில் விக்கிரமசிங்க (யூ.என்.பி.) ஒஸ்லோலில் புலிகளுடனான பேச்சுவார்த்தையின்போது ஏற்றுகொண்ட உள்ளக சுயநிர்ணய உரிமை கொண்ட சமஷ்டித் தீர்வையும் 'தமிழ் ஈழ' இலட்சியத்திற்காக புலிகள் நிராகரித்தனர்.

தமிழரசுக் கட்சி தனது கட்சியின் இலட்சியத்திலிருந்து விலகியதால் இன்று மீண்டும் மாகாண சபைக்குள்ளேயே சுற்றி வலம்வரும் சூழ்நிலைக்குள் தள்ளப்பட்டுள்ளது. கிடைத்த சந்தர்ப்பங்களை நழுவவிட்டதற்கு புலிகளை குறைகூறவும் முடியாதுள்ளது. தாங்கள் வட்டுக்கோட்டைத் தீர்மானத்தை செயற்படுத்தவே முயற்சித்தோம் என அவர்களால் விளக்கம் கூறமுடியும்.

வன்முறைப் போராட்டங்கள் ஆரம்பித்ததை தொடர்ந்து மில்லரின் புதுப் போராட்ட யுக்தியான தற்கொலைப்படையின் நெல்லியடி அதிர்ச்சித் தாக்குதல் அரசுக்கு பெரிய அழுத்தத்தைக் கொடுத்தது. அத்துடன் இந்திய விமானப்படையின் உணவுப் பொதி வினியோகம் மேலும் அழுத்தத்தை ஏற்படுத்த மாகாண சபைத் தீர்வு ஜே.ஆர்.- ரஜீவ் காந்தி கூட்டு ஒப்பந்தத்தில் உருவானது.

புலிகளின் ஆயுதப் போராட்டம் அரசின் மீதும் அரசியல்வாதிகள் சிங்கள மக்கள் மீதும் அழுத்தங்களை ஏற்படுத்தியது என்பது உண்மைதான். அதனாலேயே 2001ல் சந்திரிக்காவினால் சமஷ்டி அடிப்படையிலான தீர்வுத்திட்டம் முன்வைக்கப்பட்டது. அதன்பின் போர் நிறுத்தம் செய்து சர்வதேச நாடுகளின் அனுசரனையோடு நடைபெற்ற புலிகளுடனான பேச்சுவார்த்தையில் தமிழரசுத் தந்தை செல்வநாயகம் கனவு கண்ட சமஷ்டியை ஏற்கும் அளவுக்கு ரணில் அரசு இறங்கியிருந்தது. ' தம்பி இதோட நிறுத்திவிடுவோம் ' என்ற அன்ரன் பாலசிங்கத்தின் ஆலோசனையை பிரபாகரன் ஏற்றிருந்தால் இன்று கதை வேறாகியிருக்கும்.

**'தமிழ் ஈழம்' என்ற ஒரு மாயையான எதிர்பார்ப்புக்காக நிரந்தரத் தீர்வான சமஷ்டியைக் கைநழுவ விட்டோம்.**
***சிங்களவர்கள் ஒரு தீர்வையும் தரமாட்டார்கள் எனக் கோஷமெழுப்புவது***

*ஏற்கக்கூடியதல்ல.*

**கிடைத்த தீர்வை தமிழர்கள்தான் சரியாகப் பயன்படுத்தி தமக்கு சாதகமாக உருவாக்கவில்லை என்பதுதான் உண்மை.**

ஈழம் பேச்சுவார்த்தையால் அடையமுடியாதது என்பது சரியானதே. போர் மூலம்தான் ஆக்கிரமித்து எல்லைகளை நிலைநிறுத்த வேண்டும். ஈழத்தின் எல்லைகள் எது என்பது கூர்ந்து அவதானிக்க வேண்டியதொன்று. மன்னார் சிலாபத்துறை மறிச்சுக்கட்டியிலிருந்து அம்பாறை பொத்துவில் பாணம வரையில் எல்லைக் கோடு நீண்டு அமைய வேண்டியுள்ளது. பல தமிழ் முஸ்லீம் கிராமங்கள் எல்லைகளில் அமைந்திருக்க நேரிடும்.

யுத்தம் செய்து ஆக்கிரமித்து தமிழ் ஈழத்தை ஏற்படுத்திருந்தாலும் சிங்கள அரசு சும்மா கைகட்டிப் பார்த்துக் கொண்டிருக்குமா?. புலிகள் பிடித்த பகுதிகளை மீட்க யுத்தம் செய்யமாட்டாதா? புலிகள் பிடிக்க அரசு மீட்க மீட்கப்பிடிக்க பிடிக்க மீட்க யுத்தம் தொடருமே ஒழிய தீர்வு என்று ஒன்று ஏற்பட வாய்ப்பிருக்காது.
பாலஸ்தீனம் லெபனான் போன்று இலங்கைத்தீவும் தொடர் யுத்தம் நடைபெறும் ஒரு நாடாகிவிடும். யாழ்ப்பாணக் குடாநாட்டையும் திருகோணமலை அம்பாறை மட்டக்களப்பிலுள்ள பெரும் நிலப் பகுதிகளையும் மன்னார் வவுனியா நகரங்களையும் அரசுக்கு தாரைவார்த்து புலிகள் இயக்கத்தினரால் நடாத்தப்பட்ட அரசாங்கம் ஈழ அரசாங்கம் என்றாகிவிடுமா? யாழ் குடாநாட்டு தமிழ் மக்கள் பெரும் பண நேரச் செலவுடன் விமானம் அல்லது கடற்கப்பல் பிரயாணம் செய்ததும் கொழும்பு சாமான்களுக்கு பெரும் வரி செலுத்திப் பெறுவதும் மண்ணெண்ணை பெற்றோல் தட்டுப்பாடு என கஸ்டப்பட வைத்திருந்த நிலமையினை சற்று திரும்பிப்பார்த்தல் யுத்தத்தால் கூடிய பாதிப்புக்களுக்கு ஆளாகிய மக்கள் யாழ்குடாவாசிகளே.

வடகிழக்கில் தொடர் போர் நடப்பதை விரும்புகின்றவர்களையே ‘ஈழவாதிகள்’ என அடையாளப்படுத்தலாம். வட- கிழக்கில் வாழும் தமிழ் மக்கள் அடிமைகளாக அகதிகளாக அல்லோல கல்லோலப்பட்டு உடமையை இழந்து உரிமையை இழந்து உடலங்கங்களையும் இழந்து குற்றுயிராக அங்குமிங்கும் அலைந்து திரிந்து கொண்டிருப்பதை வைத்து தங்களின் அரசியலை நடத்தவா பழ நெடுமாறன் வைகோ போன்றோர் ஈழவாதிகளாகச் செயற்படுகின்றார்கள்?